IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.259/2016
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 3.25p.m.

வா.சா. 1 சாட்சி மாரியம்மாள் த.பெ.கருப்பையா

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 02.04.2026 in accordance with the provisions of Act XX141.**

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. பிராதில் கண்டுள்ள சொத்துக்களுக்கு சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் நான் பிராதில் 15செண்டு, 2 1/2 செண்டு மற்றும் 3/4செண்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் மேற்படி சொத்துக்கள் எங்களுக்குரிய சொத்து எங்களுக்கு வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 3சொத்துக்களுக்கு சர்வே எண் குறிப்பிட்டு பிராதில் கூறவில்லை என்றால் சரிதான்.

2. எனது நிரூபணவாக்குமூலத்தில் சர்வே எண் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் பிரதிவாதிகள் யார் என்றால் துரைச்சாமியின் மனைவி மாங்கனி மற்றும் அவரது பிள்ளைகள், ராஜமாணிக்கம் மனைவி சுந்தரம்மாள் மற்றும் அவரது பிள்ளைகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவாச் சொத்துக்கள் எங்களுக்கு பூர்வீக சொத்துக்கள் என்று குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

3. பூர்வீகச் சொத்துக்கள் என்பதற்கு யார் பெயரில் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் கூட்டுப்பட்டா தாக்கல் செய்துள்ளேன். யார்யார் பெயரில் கூட்டுப்பட்டா தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்தந்தையின் பெயர் கருப்பையா மற்றும் எனது தாத்தா சொக்கலான் ஆகியோர் பெயரிலும் தாக்கல் செய்துள்ளேன். மற்ற நபர்கள் பெயர் தெரியாது.

4. நான் கூட்டுப்பட்டா எதுவும் தாக்கல் செய்யாமல் வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பட்டா தாக்கல் செய்யவில்லை. வழக்குச்சொத்துக்களின் அமைப்பு பற்றி தெரியுமா என்றால் நான்தான் அனுபவம் செய்து வருகிறேன். தாவா வழக்கில் நீதிமன்ற ஆணையர் வழக்குச் சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

5. மேற்படி நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் கோப்புகள் **நீ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாச் சொத்தும் அதன் அருகில் உள்ள சொத்துக்களும் எங்கள் மூதாதையர்கள் நான்கு நபர்களுக்கு நான்கு பாகமாக இருந்தது என்றால் சரிதான். எனது மூதாதையர்கள் அரசன், சொக்கலான், திருவேட்டை, அழகச்சி ஆகிய 4பேரும் எங்கள் மூதாதையர்கள் என்றால் சரிதான்.

6. மேற்படி அரசனுக்கு சொக்கலான், திருவேட்டை என்ற 2பிள்ளைகள் என்றால் சரிதான். மேற்படி சொக்கலான் மகன் பெயர் வெள்ளைச்சாமி, திருவேட்டை மகன் பெயர் குருசாமி என்றால் சரிதான். மேற்படி அரசன் மற்றும் அவரது வாரிசுகளுக்கு வடக்கு பக்கம் உள்ள சர்வே எண் 10/1B1, 10/1A, 10/1B4 ஆகிய சொத்துக்கள் அவர்களுக்கு பாத்தியம் என்றால் சரிதான்.

7. சொக்கலானுக்கு அழகச்சி என்ற மகன் உள்ளார் என்றால் சரிதான். மேற்படி அழகச்சிக்கு ஜெயராமன், சொக்கலான் மற்றும் பாண்டி ஆகியோர்கள் பிள்ளைகள் என்றால் சரிதான். மேற்படியாருக்கு சர்வே எண் 10/1B3, மற்றும் 10/1B5ல் கண்ட சொத்துக்கள் பாத்தியம் என்றால் சரிதான்.

8. 3வது வாரிசு திருவேட்டை என்பவருக்கு அழகச்சி, சொக்கலான், அரசன் ஆகியோர்கள் பிள்ளைகள் என்றால் சரிதான். மேற்படி 3நபர்களின் அழகச்சியின் மனைவி பெயர் அமிர்தம்மாள் அவர்களது மகன் பெயர் பாலகிருஷ்ணன் என்றால் சரிதான். திருவேட்டையின் 2வது வாரிசு சொக்கலான் என்பவர் எனது தாத்தா என்றால் என்தாத்தா சொக்கலான்தான் திருவேட்டையின் முதல் மகன் ஆவார்.

9. மேற்படி சொக்கலானின் மகன் கருப்பையா எனது தந்தை என்றால் சரிதான். திருவேட்டை என்பவருக்கு சர்வே எண் 10/1B7மற்றும் 10/1B6 ல் கண்ட சொத்துக்கள் அவர்களுக்கு பாத்தியம் என்றால் சரிதான். 4வது வாரிசான அழகச்சிக்கு அழகு மற்றும் முனியாண்டி என்ற 2பிள்ளைகள் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி அழகச்சிக்கு தெற்குகடைசியில் உள்ள சர்வே எண்கள் 10/1B8, 10/1B9, 10/1B10ல் கண்ட சொத்துக்கள் பாத்தியம் என்றால் சரிதான்.

10. அழகச்சியின் மக்களின் வாரிசுகள் இராமராஜ் மற்றும் செல்லம் ஆகியோர்கள் மேற்படி சொத்துக்களை அனுபவம் செய்து வருகின்றனர் என்றால் சரிதான். மேற்படி அழகச்சிக்கு பாத்தியப்பட்ட தெற்கு கடைசியில் உள்ள 4வது பாகத்திற்கு வடக்கேயுள்ள சர்வே எண்கள் 10/1B7மற்றும் 10/1B6 ஆகிய இரண்டு சொத்துக்களும் திருவேட்டையின் 3 மக்களுக்கும் பாத்தியம் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களை தற்போதும்

வாதிகளாகிய நாங்கள்தான் அழகச்சி மற்றும் அரசன் ஆகியோரின் வாரிசுகளுடன் சேர்ந்து அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான்.

11. வா.சா.ஆ.1 ஆவணமாக 21.7.1972ல் பெத்தம்மாள் என்பவருக்கு என் தாத்தா சொக்கலன் மற்றும் என்தந்தை கருப்பையா வாதிகளாகிய எங்களை கட்டுப்படுத்தி அதில் கண்ட சொத்துக்களை ஒத்திவைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் கண்ட சொத்துதான் என் தாத்தாவிற்கும், எனது தந்தை கருப்பையாவிற்கும் பாத்தியம் என்றால் சரிதான்.

12. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்கள் 4ம்வாரிசான அழகச்சிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களுக்கு வடக்கேயுள்ள சர்வே எண் 10/1B7 மற்றும் 10/1B6ல் கட்டுப்பட்ட சொத்துக்கள் மற்றும் சர்வே எண் 10/1B2ல் மொத்தம் உள்ள 15 செண்டில் சுமார் 2 1/2 செண்டு கூட்டுப்பங்கில் கட்டுப்பட்ட சொத்து என்றால் சரிதான்.

13. வா.சா.ஆ.1ல் கண்ட ஒத்தியை பெத்தம்மாளிடம் இருந்து எனது தாத்தா சொக்கலான் என்பவர் ஒத்தியை செலுத்தி மீட்டுவிட்டார் எந்த வருடம் என்று எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி ஒத்தியை திருப்பியதற்கான செல்இரசீது எங்கள் கைவசம் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் கிஸ்தி இரசீதுகள் சர்வே எண் 10/1B7 மற்றும் 10/1B6 சொத்திற்குரியது என்றால் சரிதான்.

14. வா.சா.ஆ.3 வீட்டு வரி இரசீது சர்வே எண் 10/1B2ல் கட்டுப்பட்ட நாற்றுபாவும் இடம் மற்றும் கிணற்றடியாக இருந்த பொதுஇடத்தில் உள்ள வீட்டிற்கு செலுத்தப்பட்ட இரசீது என்றால் சரிதான். வா.சா.ஆ.3ல் சொத்தில் நாங்கள் அனுபவம் செய்து வரும் இடத்தை பொறுத்து

பிரதிவாதிகள் தொந்தரவு செய்யவில்லை என்றால் குடியிருப்பில் தொந்தரவு இல்லை, வெளியில் ஆடுகள் கட்டுவதற்கு பிரச்சனை ஏற்படுகிறது.

15. மேற்படி ஆடுகள் கட்டுவதில் பிரச்சனை உள்ளது என்று காவல்நிலையத்தில் பிரதிவாதிகள் மீது புகார் கொடுத்து அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2ம்வாரிசு சொக்கலான் என்பவரின் மகன் அழகச்சி அவரது மகன் ஜெயராமன் என்பவர் அவருக்குரிய சொத்தினை பெத்தம்மாள் என்பவருக்கு 2.5.1972ல் ஒத்திபத்திரம் எழுதி பதிந்து கொடுத்தார் என்றால் சரிதான்.

16. மேற்படி சொத்தானது சர்வேஎண் 10/1B2ல் உள்ள கிணற்றடி மற்றும் நாற்றுபாவும் இடத்திற்கு கிழக்கேயுள்ள சர்வே எண் 10/1B3ல் கட்டுப்பட்ட சொத்து மற்றும் சர்வே எண் 10/1B2ல் உள்ள பொதுச்சொத்தான 15 செண்டில் 2 1/2 செண்டு இடத்தையும் சேர்த்து எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி ஜெயராமன் எழுதிக்கொடுத்த ஒத்திபத்திரம் பற்றி எனது பிராது மற்றும் முதல்விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான்.

17.மேற்படி ஜெயராமன் பெத்தம்மாளுக்கு ஒத்தியாக எழுதிக்கொடுத்த இடத்தினை 23.2.1974ல் கிரைய ஆவணமாக எழுதி பதிந்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். பெத்தம்மாளின் மகன் பெயர் தெரியுமா என்றால் ராஜமாணிக்கம், துரைச்சாமி ஆவார்கள். துரைச்சாமியின் மனைவி பெயர் மாங்கனி ஆகும். மேற்படி மாங்கனி மற்றும் வாரிசுகள் சேர்ந்துதான் சர்வே எண் 10/1B2ல் கண்ட 15 செண்டில் 2 1/2 செண்டு மற்றும் சர்வே எண் 10/1B3ல் கண்ட சொத்தில் 23.1.2014ம் தேதியில் 1ம்பிரதிவாதி நாசர்உசேனுக்கு கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

18. சர்வே எண் 10/1B6ல் கண்ட சொத்து 1984ல் அமிர்தம்மாள் பெயருக்கும், சர்வே எண் 10/1B7 இராஜமாணிக்கம் (எ) முகமது உஸ்மான் மற்றும் துரைச்சாமி ஆகியோர் பெயருக்கு மாறிவிட்டது என்றால் சரிதான். சர்வே எண் 10/1B2அமிர்தம்மாள், வெள்ளைச்சாமி, சலிமாபேசம், நாசர்உசேன், முகமதுமுகைதீன் ஆகியோர் பெயரில் கூட்டாக உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

19. சர்வே எண் 10/1B3 ஆனது 1ம்பிரதிவாதி நாசர்உசேன் பெயரில் பட்டா உள்ளது என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. நாற்றுபாவும் இடத்திற்கு தெற்கேயுள்ள சர்வே எண் 10/1B7 மற்றும்10/1B6ல் கண்ட சொத்துக்கள் எங்களது அனுபவத்தில் இருந்த வந்தபோதிலும் எங்களுக்கு உரிமை பாத்தியம் இல்லாத சர்வே எண் 10/1B3ற்கு செல்ல முயற்சித்தபோது எங்களுக்கும், 1ம்பிரதிவாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான்.

20. வழக்கு தாக்கல் செய்வதற்கு எவ்வளவு வருடத்திற்கு முன்பு நாசர்உசேன் கிரையம் வாங்கிய விபரம் தெரியும் என்றால் நாங்கள் தெரிந்த உடனே வழக்கு தாக்கல் செய்தோம். மேற்படி நாசர்உசேனுக்கு முன்பாக பெத்தமாள் மற்றும் அவரது வாரிசுகள் அனுபவம் செய்து வந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். ஜெயராமன் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தான சர்வே எண் 10/1B3ல் கண்ட சொத்தினை பெத்தம்மாளுக்கு ஒத்திவைத்து அதன்பிறகு கிரையம் வைத்த விபரமும், அதன் தொடர்ச்சியாக பெத்தம்மாளும், அவரது வாரிசுகளும் அனுபவம் செய்து வரும் விபரம் எனக்கு சிறுவயது முதல் தெரியும் என்றால் ஜெயராமன் ஒத்திவைத்த விபரம் எனக்கு தெரியும்.

21. ஜெயராமன் ஒத்திவைத்த சொத்தினை திருப்பாமல் கிரையம் கொடுத்த விபரத்தை நான் எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. ஜெயராமன் ஒத்தி கொடுத்த சொத்தினை பொறுத்து என்தாத்தா சொக்கலான் என்பவரோ, எனது தந்தை கருப்பையா என்பவரோ ஆட்சேபித்து வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

22. ஜெயராமனுக்குரிய பங்கில் எனக்கோ, எனது தாத்தாவிற்கோ என்தந்தைக்கோ எந்த உரிமையும் கிடையாது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணம் ஜெயராமனுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை 1ம்பிரதிவாதி துரைச்சாமி வாரிசுகளிடமிருந்து கிரையம் வாங்கிய ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 வழக்கறிஞர் அறிவிப்பில் வா.சா.ஆ.1 சொத்தினை பொறுத்து குறிப்பிட்டு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஒத்திபத்திரத்தில் கண்ட சொத்தை பொறுத்துதான் அனுப்பியுள்ளோம்.

23. வா.சா.ஆ.5 வழக்கறிஞர் அறிவிப்பு ஜெயராமனுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை பொறுத்து அனுப்பியுள்ளோம் என்றால் சரியல்ல. பிராது சொத்து சொக்கலானுக்குள்ள பாகத்தை பொறுத்து தாக்கல் செய்யாமல் ஜெயராமனுக்குரிய பாகச்சொத்தினை குறிப்பிட்டு தவறாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தாத்தாவிற்கு பாத்தியமான சர்வே எண் 10/1B7மற்றும் 10/1B6க்குரிய பட்டாவை பிராதில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் செய்யவில்லை.

24. 1ம்பிரதிவாதி நாற்றுபாவும் இடத்திற்கு தெற்கே உள்ள சர்வே எண்கள் 10/1B7 மற்றும் 10/1B6ல் உள்ள இடத்தை எந்த தொந்தரவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதி சர்வே எண்கள்10/1B7

மற்றும் 10/1B6ல் கண்ட சொத்தினை பொறுத்து இடைஞ்சல் ஏற்பட்டதாக காவல்துறையில் புகார் கொடுக்கவில்லை என்றால் கொடுத்தள்ளேன், அந்த ஆவணம் வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

25. தாவாச் சொத்தில் 1ம்பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தாவா 1வது இலக்கச் சொத்தினை பொறுத்து தவறாக வழக்கு தாக்கல் செய்து 1ம்பிரதிவாதியை வீண் தொந்தரவு செய்து வருகிறேன் என்றாலும், 1ம்பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 4.30p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.02 18:22:21 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.